திறக்கப்பட்ட பிரிவு இன்னும் வளர்ச்சி அடையாமல் அப்படியே இருக்கிறது, 60, 61-ல் ஆரம்பிக்கப்பட்ட தனி மருந்தகங்கள் எவ்வளவு மேற்கொண்டு விரிவு படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லமுடியுமா? இல்லையானால் இனியேனும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்.ஜி.ஓ.க்கள் புற நோயாளிகளாக—அவுட் பேஷண்டு—களாக பொது மருத்துவ மனைக்குப் போகிறபோதுதான் உடனடியாக அவர்களைக் கவனித்து அலுவலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்கிற நோக்கத்தில் இந்தத் தனிப் பிரிவுகள் அங்கே ஏற்படுத்தப்படுகின்றன. அவர்கள் உள்நோயாளிகளாக இருந்து சிகிச்சை பெறவேண்டுமானால் மருத்துவ மனைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு மற்ற டாக்டர்களால் கவனிக்கப்படுகிற நிலையும் இருக்கிறது. ஆகவே, தனி மருந்தகங்கள் விரிவு படுத்தப்பட வேண்டும் என்கிற நிலை இல்லை. எல்லா மாவட்ட மருந்தகங்களிலும் இத்தகைய தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் நிலை. அப்படி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வருகிற ஆண்டில் புதுக்கோட்டை, ஈரோடு ஆகிய இடங்களிலும் ஏற்படுத்த ஆலோசனை இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : என்.ஜி.ஓ.க்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தத் தனி மருந்தகங்களில் குறிப்பிட்ட நேரத்தில் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களும், ஆசிரியர்களும் சிகிச்சை பெற வசதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்.ஜி.ஓ.க்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் யார் யாருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்கள் இங்கே சிகிச்சை பெறலாம். தொழிலாளர்களுக்குத் தனியாக இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் இருக்கின்றன. அவை மூலமாக அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

கோவையில் குழந்தைகளுக்கென தனி மருத்துவ மனை

* 159 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் குழந்தைகளுக்கு தனி மருத்துவ மனை துவக்கும் செயற் குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

1973 நவம்பர் 19]

டாக்டர் ச. மு. பழனியப்பன்: கோவையில் குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவமனை துவக்க திட்டம் இல்லை என்று சொன்னார்கள். கோவை பொது மருத்துவ மனையிலாவது குழந்தைகளுக்கு என்று தனியாகக் கவனித்து சிகிச்சை அளிக்கும் பிரிவை ஏற்படுத்துவார்களா? குழந்தைகளுக்கு வரும் நோயை டையக்னோஸ் செய்வதற்குக் கூட அங்கே சிறந்த நிபுணர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவத் துறையில் மேலே படிக்கிற வர்களுக்கு, 'பெடியாட்ரிக்' துறையில் தனிப்படிப்புக்கு வசதி அளிக்க— மருத்துவக் கல்லூரியோடு இணைந்து சிறப்புப் படிப்புக்காக குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவ மனையும் கல்லூரியும் ஏற்படுத்துவது மரபு. இங்கே குழந்தை மருத்துவத்தில் நன்கு பயிற்சி பெற்ற டாக்டர்கள் மற்ற இடங்களில் நியமிக்கப்படுகிறார்கள். கோயம்புத்தூரிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார். கோவையில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி காரணமாக அங்கே தனியாகவே உள்ள பிரிவு விரிவாக்கப்பட வேண்டுமானால் அரசாங்கம் அதனைப் பரிசீலித்து நிறைவேற்ற முயற்சிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாவட்டங்களில் தனியாகக் குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவ மனை ஏற்படுத்த இப்போது திட்டம் இல்லை என்று சொன்னார்கள். மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவ மனைகளிலாவது குழந்தைகளுக்கு என்று தனிப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்தக் கருத்து அரசாங்கத்திற்கு உண்டு. நிதி நிலையும், பயிற்சி பெற்ற டாக்டர்களும், இடவசதியும் ஏற்பட ஏற்பட அது போன்று தனியாகவே உருப்பெற்றுவிடும்.

சிங்காநல்லூர் கஸ்தூரிபாய் மருத்துவ மனை

*** 160. வினு—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் கஸ்தூரிபாய் ஆஸ்பத்திரியை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, நகரமன்றத்தின் மூலமும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப் பினர் மூலமும் மகஜர்கள் வந்தனவா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ): இல்லை.